**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

**…………**

**வழக்கு எண். NC681/F/2024 (SA1821/F/2022)**

திரு R.ஈஸ்வரன் ... மனுதாரர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்,
துணை மேலாளர் (வணிகம்),
அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்,
2,பல்லவன் சாலை,
சென்னை- 600002 ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு ஏற்கனவே 22.04.2024 அன்று இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான தற்போதைய நிலை குறித்த முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் “தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர் 02.10.2024 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு R.ஈஸ்வரன் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு.R.மணி, துணை மேலாளர் (வணிகம்), அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், 2,பல்லவன் சாலை, சென்னை ஆஜரானார்.

2. மனுதாரர் 30.09.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 2011ம் ஆண்டு முதல் (விருதுநகர் நகராட்சி கர்மவீரர் காமராஜர் பேருந்து நிலையம்) தங்களது நிர்வாக கிளைகளிலிருந்து விருதுநகர் பயணிகளுக்காக இயக்கப்பட்ட மற்றும் தற்போதும் இயக்கப்படும் அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்துகளின் புறப்படும் இடம், சேரும் இடம், நேரம், விருதுநகருக்கான நேரம், பேருந்துகள் இயக்கப்பட்ட மற்றும் இயக்கப்படும் கிளைகள் வழித்தட எண்களுடனான விபர தகவல்கள், பேருந்து நிருத்த விபரத் தகவல்கள் என்பது போன்ற தகவல்களை 5 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 01.11.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 10.11.2021 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 13.12.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 20.01.2022 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் பொதுத் தகவல் அலுவலர் முழுமையான தகவல்களை வழங்கவில்லை எனவும், அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் ஏற்கெனவே 15.05.2024 மற்றும் 03.06.2025 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக மனுதாரர் கோரிய முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் மனுதாரருக்கு அனுப்பியதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதங்களின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு வழங்கிய தகவல்கள் முழுமையான தகவல்கள் என இவ்வாணையம் உறுதி செய்து, ***இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் ஆணை நிறைவேற்றப்படாமை மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC681/F/2024 (SA1821/F/2022)**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம்,
6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு,
விருதுநகர் - 626001

**<u>வழக்கு எண். NC681/F/2024 (SA1821/F/2022)</u>**

**<u>மனுதாரர்</u>**

திரு. R.ஈஸ்வரன்,
எண் 91, சிவந்திபுரம் தெரு,
ஆத்துமேடு,
விருதுநகர் மாவட்டம் - 626001.

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.